போகிறதா, கோர்ட்டுக்குப் போகிறபோது சாமிகள் மீது வழக்குப் போடப் படுகிறதா அல்லது அவர்கள் சாட்சிக்கு அழைக்கப்படுகின்றனரா என்ற விவரத்தை அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அது சம்பந்தமான தகவல இல்லே.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : சிலேகள் திருட்டுப் போவதாகச் சொன்னார்கள். இந்தச் சிலேகள் திருட்டுப்போவது அதன் உலோகங்களுக்காகத் திருட்டு போகிறதா அல்லது வெளிநாடுகளில் புராதன சிற்பங்களேச் சேகரிக்கிறவர்கள் அதிக விலேக்கு வாங்கிச் சேர்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள், ஆகவே அதன் காரணமாகத் திருடு போகிறதா? எந்த நோக்கத்தோடு இவை திருடப்படுகின்றன என்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பல்வேறுகப் பேசப்படுகிறது என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனல், திருடுபோவது எதற்காக என்பது பற்றி என்னிடம் தகவல் இல்லே.

மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தானம்.

*** 554 வின.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு அறநிலேய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மரக்காணம் பூமலிங்கீஸ்வரர் தேவஸ்தான நிர்வாக தர்மகர்த்தாவின் மீது செய்யப்பட்ட புகார் எந்த நிலேயிலுள்ளது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இது குறித்து சென்னே, இந்து சமய அறக்கட்டளேகள் ஆணையாளர் 27—11—1968 தேதியன்று விசாரணே ஒன்றை நடத்தினர். ஸ்ரீ பூமீஸ்வரர் கோவிலின் பரம்பரை அறங்காவலர் கோயில் அலுவல்களேச் சரியான முறையில் நிர்வகித்து வராததன் காரணமாக கோயில் பணி ஒழுங்காக நடைபெறுவது தடைப்பட்டது. எனவே, தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளேகள் சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ் ஆணையாளர் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமித்தார். கோயிலின் பொறுப்பு, பதிவேடுகள் முதலியவற்றைப் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் பரம்பரை அறங்காவலருக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலேவரவர்களே, அந்தப் பரம்பரை அறங்காவலர் அவர்கள் நீண்ட நாட்களாக அங்கேயிருந்து வந்ததன் பேரில் நிறைய பணம் கையாடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்து வருவதும், அதன் காரணமாக ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னலேயே அவர் பேரிலே புகார் செய்யப்பட்டு அந்தப் புகாரை விசாரிப்பதற்கு அவர் முன்னல் அமைச்சர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்ற அந்தக் காரணத்தினல் நடவடிக்கை எடுக்கப்படவில்லே என்று கூறப்படுவதும் உண்மையா ? இப்பொழுதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அவர் மீது என் நடவடிக்கை எடுக்கப்படவில்லே என்பதற்கு என்னிடத்தில் தகவல் இல்லே. ஆனல் அவர் பரம்பரை அறங்காவலராக இருந்து கோவில் சரியானபடி நிர்வகிக்க கப்படவில்லே என்ற காரணத்தினல் அவர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு, அதற்காக ஒரு அதிகாரியையும் அந்தக் கோயிலுக்கு நியமனம் செய்து உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு யூனிட் மின்சாரத்தின் அடக்க விலே.

*** 548 வின.—திரு. எஸ். அக்கினிராஜு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள சமயநல்லூர் அனல் மின்சார நிலேயத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் 1 யூனிட்டின் அடக்க விலே என்ன ?